# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு

## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்


### இலங்கை மத்திய வங்கி

2019 மே


தொகுதி 01 வெளியீடு 01

## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்





### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்





2019 மேயில் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 961 மில்லியனுக்கு 4.0 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தன.

2019 மேயில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,784 மில்லியனுக்கு 3.9 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதங்கள் (%)




### வர்த்தகப் பற்றாக்குறை (ஐ.அ.டொலர் மில்.)




2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 4.4 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்த வேளையில் இறக்குமதிச் செலவினம் 14.8 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.


வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2018 மேயுடன் ஒப்பிடுகையில் 2019 மேயில் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது. முதல் ஐந்து மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,633 மில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் (சன – மே 2019)

### ஏற்றுமதிகள் (ஐ.அ.டொலர் மில்.)





### இறக்குமதிகள் (ஐ.அ.டொலர் மில்.)




# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம்





### ஏற்றுமதிகளின் அளவுச் சுட்டெண்





வேளாண்மை ஏற்றுமதிகளில் வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் 2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தமைக்கு, கைத்தொழில் ஏற்றுமதிகளில் உயர்ந்த செயலாற்றம் பதிவுசெய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

## வேளாண்மை ஏற்றுமதிகள்


### வேளாண்மை ஏற்றுமதிகள்





### வேளாண்மை அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம்




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*





*கொழும்பு ஏல விலைகளை அடிப்படையாகக் கொண்டது


2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்குத் தேயிலை, சிறுவேளாண்மை உற்பத்திகள் மற்றும் இறப்பர் ஏற்றுமதிகள் என்பனவற்றில் மோசமான செயலாற்றம் அவதானிக்கப்பட்டமையே காரணமாகும். எனினும், தெங்கு, காய்கறிகள் மற்றும் கடலுணவு என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இக்காலப்பகுதியில் அதிகரித்தன. வேளாண்மைப் பண்டங்களுக்கு, பன்னாட்டுச் சந்தையில் குறிப்பாக, தேயிலைக்குக் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த விலைகள் ஏற்றுமதி அளவுகளில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டமைக்கிடையிலும் இவ்வீழ்ச்சிக்கு வழிவகுத்தன.

## கைத்தொழில் ஏற்றுமதிகள்


### கைத்தொழில் ஏற்றுமதிகள்





### கைத்தொழில் அளவு மற்றும் பெறுமதிச் சுட்டெண்கள்




### கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றும்





### நீர்க்கல மற்றும் வானூர்தி ஏற்றுமதி விலைகள்





2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தமைக்கு புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளில் காணப்பட்ட உயர்ந்த செயலாற்றமே காரணமாகும். எனினும், இக்காலப்பகுதியில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு மற்றைய பிராந்திய அயல் நாடுகளிலிருந்தான போட்டியின் காரணமாக கேள்வி குறைவடைந்தமையே காரணமாகும். இக்காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் ஏற்றுமதி அளவுகள், 2018இன் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன.

## இறக்குமதிச் செயலாற்றும்

### இறக்குமதிச் செயலாற்றும்





### இறக்குமதி அளவுச் சுட்டெண்





2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இறக்குமதிகள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதிகளின் அனைத்து முக்கிய வகைகளின் மீதும் உறப்பட்ட தாழ்ந்த செலவினமே காரணமாகும்.

## நுகர்வுப்பொருட்களின் ஏற்றுமதிகள்


### நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள்





### நுகர்வுப்பொருட்களின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### நுகர்வுப்பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றும்





### சீனி, பருப்பு வகை மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்





2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்குப் பெரும்பாலான இறக்குமதி வகைகள், குறிப்பாக ஊர்திகள், அரிசி, சீனி, பாற்பண்ணைப்பொருட்கள் மற்றும் காய்கறிகள் போன்ற உணவுப்பொருட்களின் இறக்குமதிகள் குறைவடைந்தமையே காரணமாகும். (இவ்வரைபடத்தில் அரிசி, சீனி, பாற்பண்ணைப்பொருட்கள் மற்றைய வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், 2019இன் முதல் ஐந்து மாத கலப்பகுதியில் கணிசமாக வீழ்ச்சியடைந்த வீட்டுப்பயன்பாட்டுப்பொருட்கள் மற்றும் தளபாடங்கள், வீட்டுச் சாதனங்கள், ஆடைகள் மற்றும் அதனுடன் சேர்ந்த பொருட்கள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பனவும் ஏனைய வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன). இவ்வீழ்ச்சிக்கு இலங்கை மத்திய வங்கியினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளின் தாக்கமும் பக்கபலமாக விளங்கியது.

## இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள்


### இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம்





### இடைநிலைப்பொருட்களின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



### இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிச் செயலாற்றும்




### மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்தச் சராசரி)





*2018 பெப்புருவரியில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.


2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இடைநிலைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு தங்கம், எரிபொருள், பிளாத்திக்கு மற்றும் அவற்றுடன் இணைந்த பொருட்கள், கோதுமை மற்றும் சோளம் என்பனவற்றின் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும். இவ்வீழ்ச்சிக்கு, 2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் குறைவாக இருந்தமையே காரணமாகும்.

## முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிகள்


### முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம்




### முதலீட்டுப்பொருட்களின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்




### முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதிச் செலவினம்




2019இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் முதலீட்டுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு அனைத்து வகைகளினதும் குறைந்த இறக்குமதிகளே காரணமாகும். எனினும், 2019 மேயில் முதலீட்டுப்பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்குப் பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் கட்டடப்பொருட்கள் மீது உறப்பட்ட உயர்ந்த செலவினங்கள் காரணங்களாக அமைந்தன.

வெளிநாட்டுத் துறையில் காணப்படும் சாதகமான அபிவிருத்திகளையும் 2019 வரவு செலவுத்திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளையும் பரிசீலனையில் கொண்டு ஊர்திகள் மற்றும் இன்றியமையாதன அல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீது 2018 ஓகத்திலிருந்து நவெம்பர் வரையான காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகள் 2019 மாச்சிலிருந்து புறக்கீடு செய்யப்பட்டன.

# வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு

## ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொலர் மில்.)

| விடயம் | | மே-2018 | மே-2019 | ஆ.ஆ மாற்றம் (%) | சன - மே 2018 | சன - மே 2019 | ஆ.ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதி** | | **209.6** | **215.9** | **3.0** | **1,052.9** | **1,040.6** | **-1.2** |
| இதில் | தேயிலை | 121.2 | 125.6 | 3.6 | 599.3 | 571.8 | -4.6 |
| | தெங்கு | 24.2 | 32.2 | 33.4 | 125.1 | 143.9 | 15.0 |
| | வாசனைத்திரவியங்கள் | 26.0 | 22.6 | -12.8 | 122.0 | 119.1 | -2.4 |
| | கடலுணவு | 21.2 | 18.6 | -12.4 | 114.5 | 122.2 | 6.7 |
| **கைத்தொழில் ஏற்றுமதி** | | **709.7** | **741.3** | **4.5** | **3,632.9** | **3,853.2** | **6.1** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 398.3 | 424.2 | 6.5 | 2,065.5 | 2,256.0 | 9.2 |
| | இறப்பர் உற்பத்திகள் | 68.6 | 77.2 | 12.5 | 349.1 | 363.1 | 4.0 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 46.1 | 39.5 | -14.3 | 219.3 | 206.4 | -5.9 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 38.5 | 37.2 | -3.5 | 193.6 | 202.3 | 4.5 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 36.2 | 38.1 | 5.4 | 174.9 | 172.2 | -1.6 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணம் | 23.1 | 24.8 | 7.5 | 129.7 | 131.1 | 1.0 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 12.6 | 8.4 | -33.0 | 65.0 | 49.2 | -24.4 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதி** | | **4.5** | **3.8** | **-15.8** | **21.6** | **21.4** | **-0.8** |
| **மொத்த ஏற்றுமதி** | | **923.8** | **961.0** | **4.0** | **4,707.5** | **4,915.3** | **4.4** |

## இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொலர் மில்.)

| விடயம் | | மே-2018 | மே-2019 | ஆ.ஆ மாற்றம் (%) | சன - மே 2018 | சன - மே 2019 | ஆ.ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப்பொருட்கள்** | | **414.8** | **332.5** | **-19.8** | **2,194.8** | **1,552.9** | **-29.2** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 128.6 | 134.8 | 4.9 | 781.2 | 592.3 | -24.2 |
| இதில் | அரிசி | 0.8 | 0.5 | -45.6 | 99.6 | 5.4 | -94.6 |
| **உணவல்லா நுகர்வுப்பொருட்கள்** | | 286.2 | 197.7 | -30.9 | 1,413.6 | 960.7 | -32.0 |
| இதில் | ஊர்திகள் | 149.3 | 58.7 | -60.7 | 665.9 | 276.0 | -58.5 |
| **இடைநிலைப்பொருட்கள்** | | **1,042.7** | **1,047.0** | **0.4** | **5,372.5** | **4,703.8** | **-12.4** |
| இதில் | எரிபொருள் | 348.9 | 402.8 | 15.5 | 1,750.9 | 1,716.4 | -2.0 |
| | தங்கம் | 0.1 | 0.6 | 546.2 | 437.4 | 1.5 | -99.7 |
| | புடவை மற்றும் புடவைப்பொருட்கள் | 246.8 | 260.6 | 5.6 | 1,129.5 | 1,168.2 | 3.4 |
| | வளமாக்கி | 12.1 | 10.6 | -12.0 | 100.6 | 85.2 | -15.3 |
| | கோதுமை மற்றும் சோளம் | 44.7 | 23.9 | -46.5 | 174.9 | 110.7 | -36.7 |
| **முதலீட்டுப்பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **399.5** | **404.1** | **1.2** | **2,054.2** | **1,939.4** | **-5.6** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 201.4 | 206.8 | 2.7 | 1,068.3 | 1,055.6 | -1.2 |
| **மொத்த இறக்குமதி** | | **1,857.0** | **1,783.7** | **-3.9** | **9,621.6** | **8,196.2** | **-14.8** |

## வர்த்தக மீதி (ஐ.அ.டொலர் மில்.)

| விடயம் | மே-2018 | மே-2019 | ஆ.ஆ மாற்றம் (%) | சன - மே 2018 | சன - மே 2019 | ஆ.ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக மீதி** | -933.2 | -822.7 | - | -4,914.1 | -3,280.9 | - |

## வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (அ)

| விடயம் | | மே-2018 | மே-2019 | ஆ.ஆ மாற்றம் (%) | சன - மே 2018 | சன - மே 2019 | ஆ.ஆ மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 128.6 | 133.8 | 4.0 | 131.0 | 136.8 | 4.4 |
| | அளவுச் சுட்டெண் | 143.9 | 166.1 | 15.5 | 133.1 | 149.2 | 12.1 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 89.3 | 80.5 | -9.9 | 98.5 | 91.7 | -6.9 |
| **இறக்குமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 166.2 | 159.6 | -3.9 | 172.2 | 146.7 | -14.8 |
| | அளவுச் சுட்டெண் | 169.2 | 172.9 | 2.2 | 179.8 | 160.5 | -10.8 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 98.2 | 92.3 | -6.0 | 95.8 | 91.4 | -4.5 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | 91.0 | 87.2 | -4.1 | 102.8 | 100.3 | -2.5 |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்